பக்கங்கள் 14+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | மாசி 14 புதன்கிழமை 26.02.2025 | அதிர்வு 210

## நான்கரை மணிநேரம் நாமலை துருவிய சி.ஐ.டி.



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, வாக்கு மூலம் வழங்குவதற்காகக் குற்றப் புலனாய்வுத் 03▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# யாழ். வைத்தியசாலை நாளை முதல் முடங்கும்

## நிர்வாகத்துக்கு எதிராகப் போராட்டம் என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்,
ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை நிர்வாகத்துக்கு எதிராக நாளை புதன்கிழமை முதல் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. 03▶

## முல்லைத்தீவில் நேற்று மாயமான யாழ். சிறுவன் இன்று சடலமாக மீட்பு



முல்லைத்தீவு, வற்றாப்பளைப் பகுதியில் 16 வயதுடைய சிறுவன் ஒருவன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து உறவினர் வீட்டுக்குச் சென்ற மேற்படி சிறுவன் நேற்று காணாமல்போயிருந்த நிலையில் உறவினர்களால் தேடப்பட்டு வந்தார் என்று கூறப்படுகின்றது.

இந்நிலையில், இன்று அந்தப் பகுதியிலுள்ள நீர் நிலை ஒன்றில் இருந்து மேற்படி சிறுவன் சடலமாக மீட்கப்பட்டுளார். 03▶



## கம்பஹாவில் துப்பாக்கிச்சூடு!

### ஓட்டோ சாரதி படுகாயம்

கம்பஹா மாவட்டம், மினுவாங்கொடை, பத்தண்டுவன பகுதியில் இன்று முற்பகல் 11 மணியளவில் நடந்த துப்பாக்கிச்சூட்டில் ஆண் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். 03▶

# யாழில் தமிழ்க் கட்சிகளின் இரண்டாவது கலந்துரையாடல்

## தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் பங்கேற்கவில்லை







(எஸ்.நிதர்ஷன்)

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் சங்கு சின்னத்தில் போட்டியிடுவது தொடர்பில் இணக்கத்தை ஏற்படுத்துவதற்கான தமிழ்க் கட்சிகளின் இரண்டாவது கலந்துரையாடல் இன்று நடைபெற்றது.

இன்று முற்பகல் யாழ். திருநெல்வேலியில் உள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

மேற்படி விடயம் தொடர்பான தமிழ்க் கட்சிகளின் முதலாவது சந்திப்பு கடந்த 23 ஆம் திகதி யாழ். இணுவில் பகுதியில் இடம்பெற்றிருந்த நிலையில் இன்று இரண்டாவது சந்திப்பு நடைபெற்றது.

இன்றைய சந்திப்பில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்), ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ), ஜனநாயகப் போராளிகள் கட்சி, தமிழ்த் தேசியக் கட்சி, தமிழ் மக்கள் கூட்டணி, ஜனநாயகத் தமிழரசுக் கட்சி, சமத்துவக் கட்சி ஆகிய 8 கட்சிகள் சார்பில் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

மேற்படி கலந்துரையாடலில் தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் சார்பில் பிரதிநிதிகள் எவரும் பங்கேற்கவில்லை.

இந்தக் கூட்டணியில் தமிழ் மக்கள் கூட்டணி இணைவதா இல்லையா என்பது தொடர்பான முடிவு கட்சியின் செயலாளர் நாயகத்துடன் பேசி விரைவில் அறிவிக்கப்படும் என்று அந்தக் கட்சியின் சார்பில் குறித்த கலந்துரையாடலில் பங்கேற்ற சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தார்.

# இரவிரவாக இணைய வழியில் இடம்பெற்ற கிளி. மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம்

(ந.லோகதயாளன்)

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று இரவு இணைய வழியில் அவசரமாக நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஏப்ரல் மாதம் வரையான கணக்கு அறிக்கையில் ஒதுக்கிய 13 மில்லியன் ரூபாவுக்கான ஒதுக்கீடு மற்றும் கிராஞ்சி வீதி அமைப்புக்கான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் அனுமதியைப் பெறும் நோக்கில் இரவோடு இரவாக இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

இரவு 8 மணிக்கு ஆரம்பமாகி 9.30 மணிக்கு நிறைவுற்ற இணைய வழி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட செயலகத்தினர், பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி சபைச் செயலாளர்கள் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் இணைக்கப்பட்டிருந்தனர்.

இருந்தபோதும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கோ அல்லது ஊடகவியலாளர்களுக்கோ கூட்டத்தில் இணைந்துகொள்ளும் சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை.

# “சாந்தன் துயிலாயம்” அங்குரார்ப்பணம்

(ந.லோகதயாளன்)

“சாந்தன் துயிலாயம்” எதிர்வரும் வெள்ளிக்கிழமை சாந்தனின் தாயாரால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது.

எள்ளங்குளம் துயிலும் இல்லத்தில் காலை 9 மணிக்கு, சாந்தனின் புகழுடல் விதைக்கப்பட்ட இடத்தில், சாந்தனின் குடும்பத்தினரால் உருவாக்கப்பட்டுள்ள ”சாந்தன் துயிலாயம்” தாயாரால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது.

அரசுகளாலும், அரசியலாலும், சட்டத்தாலும் , கடவுள்களாலும் 33 ஆண்டுகள் ஏமாற்றப்பட்ட ஒரு தாயின் ஏமாற்று அடையாளமாக இது உருவாக்கப்பட்டுள்ளது

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில், கைதாகி சுமார் 32 வருடங்களுக்கு மேலாகச் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டு விடுதலையான சாந்தன், குடிவரவு சட்டத்தின் கீழ் கடந்த 2023ஆம் ஆண்டு முதல் திருச்சி சிறப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்த காலப்பகுதியில் கடந்த 2024ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி காலமானார்.




அவரது விடுதலைக்காக அவரது குடும்பத்தினர் 33 வருடங்களாகப் போராடி வந்தனர். சிறையில் இருந்து விடுதலையான பின்னர் திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த வரை, மீள இலங்கைக்கு அழைத்து வர குடும்பத்தினர் சுமார் ஒன்றரை வருடகாலமாகப் போராடினார்கள்.

தமிழ் அரசியல்வாதிகள் பலரும் பாராமுகமாகச் செயற்பட்ட நிலையில், இலங்கை ஜனாதிபதி, பிரதமர் முதல் இந்திய அரசியல் தலைவர்கள் முதல் சாந்தனின் விடுதலைக்காக அவரது குடும்பத்தினர் மன்றாடி வந்த நிலையில், எவரும் கண்டுகொள்ளாத நிலையில், அவரது உயிரற்ற உடலையே இலங்கை கொண்டு வந்து அவரது சொந்த ஊரில் விதைக்க முடிந்தது என்பது குறிப்பிடத்தக்கது.



# ஐஸ் போதைப்பொருளுடன் இளைஞர் ஒருவர் சிக்கினார்

(ராமு தனராஜா)

ஐஸ் போதைப்பொருளுடன் நேற்று இரவு நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

24 வயதுடைய சுவினிதகம பகுதியைச் சேர்ந்த நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று இரவு பதுளை பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது பதுளை நகரில் சந்தேகத்துக்கிடமான நபர் ஒருவரைச் சோதனைக்கு உட்படுத்தியுள்ளனர்.

இதன்போது மேற்படி நபர் சூட்சுமமான முறையில் தன் கைவசம் மறைத்து வைத்திருந்த 5400 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளைக் கைப்பற்றியுள்ளதாகப் பதுளை பொலிஸார் குறிப்பிட்டனர்.

சந்தேகநபரிடம் விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர் அவரைப் பதுளை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகப் பதுளை பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### முல்லைத்தீவில்...

சிறுவனின் மரணம் கொலையா? அல்லது விபத்தா? என்பது குறித்து பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### யாழ். வைத்தியசாலை...

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"நோயாளிகளின் பாதுகாப்பை உறுதி செய்யத் தவறியமை மற்றும் யாழ். போதனா வைத்தியசாலையின் நிர்வாகத்தைத் தக்க வைப்பதற்காக மருத்துவமனை ஊழியர்களிடையே தொடர்ந்தும் சர்ச்சைகளை உருவாக்கும் முயற்சிகளைத் தொடர்ச்சியாக வைத்தியசாலைப் பணிப்பாளர் மேற்கொண்டு வருவதை எதிர்த்து தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட நாம் தீர்மானித்துள்ளோம்.

நாங்கள் தொடர்ச்சியாக யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகத்தோடு இரண்டு மாதங்களாகக் கலந்துரையாடல்களை மேற்கொண்டு வந்த நிலையிலும் நோயாளர்களின் பாதுகாப்பை யாழ். போதனா வைத்தியசாலையின் நிர்வாகம் உறுதி செய்யத் தவறியமையால், தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம் என்பதை மனவருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பின்வரும் காரணங்களுக்காகவே நாம் எமது தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளோம்.

1. நோயாளர் அவசர சேவைகளுக்கான பிரிவுகளுக்கு ஆளணிப் பற்றாக்குறையாகவும் அதேநேரம், சாதாரண பிரிவுகளுக்கு அதிகமான ஆளணியும் பொருத்தப்பாடற்ற விதத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டு இருப்பதனால் நோயாளரின் உயிருக்கு உத்தரவாதம் இல்லாமல் உள்ளது.

2. யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகத்தின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்காக விபத்து, அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் ஒரு ஆபத்தான பணியாளரைப் பொறுப்பில் இருத்தி, அர்ப்பணிப்பான பணியாளரை இடம் மாற்றியுள்ளமை நோயாளிகளின் உயிராபத்துக்கேதுவான பாதகமான நிலைமை நிலையை உருவாக்கியுள்ளது.

3. சில ஊழியர்களின் பொறுப்புணர்ச்சி அற்ற நடவடிக்கைகள் தொடர்பாக வைத்திய நிபுணர்கள் சுட்டிக்காட்டியபோதும் அவர்களைத் திருத்துவதற்கு இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

4. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் மருத்துவ நிபுணர்களால் தகவல்கள் கோரப்படும்போது தவறான தகவல்களை வழங்குவதுடன் தகவல்களை வழங்குவதில் தாமதம் செலுத்துதல்.

5. வைத்தியசாலையில் ஆபத்தான நிலையில் உள்ள அனைத்து நோயாளிகளினதும் பாதுகாப்பை உறுதி செய்யும் வரை தொழிற்சங்க நடவடிக்கையாக, அதிதீவிர சிகிச்சை தவிர்ந்த சாதாரண பணிகளையும் இடைநிறுத்த முடிவு செய்துள்ளோம்.

இது நோயாளரின் நலன் கருதி எடுக்கப்பட்டுள்ள முடிவு என்பதனால் நீண்டகால நோக்கிலான சரியான முடிவுகள் எட்டப்படும் வரை தொழிற்சங்க நடவடிக்கையைத் தொடர வாய்ப்புள்ளது. இதனால் யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைகள் தவிர்ந்த ஏனைய சிகிச்சைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்படும் என்பதனை மன வருத்தத்துடன் நாம் தெரிவித்துக் கொள்கின்றோம்." - என்றுள்ளது.

### நான்கரை...

திணைக்களத்தில் இன்று முன்னிலையானார்.

ஶ்ரீலங்கன் எயார் லைன்ஸ் செய்த எயார் பஸ் விமானக் கொள்முதல் ஒப்பந்தம் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காகவே அவர் இன்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையானார்.

இந்தநிலையில், அவர் நான்கரை மணி நேரம் வாக்குமூலம் வழங்கிய பின்னர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் இருந்து வெளியேறினார்.

### கம்பஹாவில்...

36 வயதுடைய கொட்டகம முதியான் சலாகே லஹிரு ரந்தீர் காஞ்சன என்ற ஓட்டோ சாரதியே இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரால் இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது என்று ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

படுகாயமடைந்த நபர் சிகிச்சைக்காக மினுவாங்கொடை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கம்பஹா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களைக் கைது செய்ய மினுவாங்கொடை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# அபத்த வீரர்கள்

தென்னிலங்கையில் மோசமாக அதிகரித்திருக்கும் பாதாள உலகக் குழுக்களின் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் மற்றும் பதிலடியாகப் பொலிஸ், சிறைத் துறை மற்றும் பாதுகாப்பு தரப்பினரின் காவலில் இருப்போர் படுகொலை செய்யப்படுகின்றமை போன்ற சம்பவங்கள் அதிகரித்துள்ள பின்னணியில் அதுபற்றி தென்னிலங்கையில் அதிகம் பிரஸ்தாபிக்கப்படுகின்றது.

இந்தப் படுகொலைகள் தொடர்பில் தேவையற்ற - அதிகப்பிரசங்கித்தனமான - பிரசாரங்கள் வேண்டுமென்றே முன்னெடுக்கப்படுகின்றன என்று காட்ட முயலும் சில ஊடகங்கள், அதில் கூட தங்கள் பேரினவாத மேலாதிக்கத் திமிர்த்தனத்தைப் பிரதிபலிக்கத் தவறவில்லை.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாட்டில் ஒரு குற்ற அலை ஏற்பட்டிருப்பதாகத் தொடர்ந்து பேசுகிறார் என்றும், ஆயினும் புள்ளிவிவரங்கள் வேறுபடுகின்றன என்றும் அந்த விமர்சகர்கள் குறிப்பிடுகிறார்கள்.

பிற சர்வதேச நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை குற்றம் குறைந்த நாடு என்று பிரபலாபிக்கும் அந்த விமர்சகர்கள், இலங்கையில் கொலை விகிதம் ஒரு லட்சம் பேருக்கு மூன்று என்பதற்கும் குறைவாகவே உள்ளது, இது உலக சராசரியான ஆறு என்பதிலும் விடப் பெருமளவு குறைந்தது, நடுத்தர மற்றும் குறைந்த வருமானம் கொண்ட மற்றைய நாடுகளில் இது ஆறாக இருக்கும்போது இலங்கையில் அதிலும் அரைவாசி அளவில் குறைவாக உள்ளது, பெல்ஜியம், டென்மார்க், பிரான்ஸ், ஜேர்மனி, கிறீஸ், அயர்லாந்து, இத்தாலி, நெதலர்லாந்து, ஸ்பெயின், ஆஸ்திரியா, பின்லாந்து, சுவீடன் போன்ற பொருளாதார கூட்டுறவு மற்றும் அபிவிருத்தி நிறுவன நாடுகளுடன் ஒப்பிடுகையில் அங்கு ஒரு லட்சம் பேருக்கு சராசரியாக ஐந்தாக உள்ள கொலை எண்ணிக்கை விகிதம் இலங்கையில் மூன்றுக்கும் குறைவு என அவர்கள் நியாயப்படுத்துகிறார்கள்.

மஹிந்த ராஜபக்ஷ கற்பனையான தேசியப் பாதுகாப்பு எச்சரிக்கைகளை உருவாக்கி, அதன் மூலம் தனிப்பட்ட அதிகாரத்தை தீவிரப்படுத்திக் கொண்டார் என்றும், ஊடகவியலாளர்கள் மற்றும் அரசியல் எதிர்ப்பாளர்கள் வேட்டையாடப்பட்ட பின்னர் தேசிய பாதுகாப்பு என்ற சாக்குப் போக்கில் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகள் முடக்கப்பட்டன என்றும் இந்த விமர்சகர்கள் இப்போது குறிப்பிடுகிறார்கள்.


இந்த நாட்டில் நீங்கள் தெருவில் கடத்தப்படுவதற்கோ அல்லது காரில் கடத்தப்படுவதற்கோ மிகவும் சாத்தியமில்லை, இல்லாத குற்ற அலையை மிகப் பிரபலப்படுத்தி விற்கும் ஆவேசம் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களினாலும் பிற புலம்பெயர்ந்த தரப்புகளினாலும் திட்டமிட்டு முன்னெடுக்கப்படுகின்றது என்கின்றனர் அந்தச் சிங்கள விமர்சகர்கள்.

தனிமைப்படுத்தப்பட்ட சம்பவங்களை விரிவுபடுத்தி, தீவிரமாகக் காட்டி, யதார்த்தத்திற்கு எதிரான பொது உணர்வை உருவாக்குகிறார்கள். இதே போன்ற உணர்வெழுச்சி நிலைதான் கோட்டாபய ராஜபக்ஷவின் பெருவெற்றிக்கும் வழி கோலியது என்கிறார்கள் அந்த விமர்சகர்கள்.

இலங்கையில் 16 ஆண்டுகளுக்கு முன்னர் யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், அடிப்படை உரிமை மீறல்கள், கொலைக் குற்றங்கள் போன்றவை வகை தொகையின்றி உச்சமாக இருந்த போது, இந்த விமர்சகர்கள் எங்கு சென்றிருந்தார்கள்? அப்போது இழைக்கப்பட்ட கொடூரங்களுக்கு இதுவரை நீதி வழங்கப்படாதமை குறித்தும், பொறுப்பு கூறல் நிலைநாட்டப்படாதமை பற்றியும், கண்மூடித்தனமான - வெறித்தனமான - குற்றங்கள் புரியப்பட்ட அவலத்துக்கு உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படாமை தொடர்பிலும் இந்த விமர்சகர்ளுக்கு எதுவும் தெரியவில்லை. அவர்கள் கண்மூடி இருக்கிறார்கள்.

யுத்த காலத்தில் பயங்கரவாதத்தை அழிக்கிறோம் என்ற பெயரில் ஆளும் தரப்பு - ஆட்சி பீடம் - கட்டவிழ்த்து விட்ட அரச பயங்கரவாதத்தை மூடி மறைக்க உதவிய இந்த விமர்சகர்கள், இப்போது அரசாங்கம் வழமையாகச் சித்திரிக்கும் 'பயங்கரவாதம்' எதுவும் கடந்த 16 ஆண்டுகளாக தமிழர் தேசத்தில் இடம்பெறாத போதிலும், தமிழர் தேசம் இராணுவப் பிடிக்குள் - ஆக்கிரமிப்புக்குள் - அடக்கப்பட்டு இருப்பது குறித்து புள்ளி விவரங்களோடு உண்மை நிலையை எடுத்துக் கூறாது, கள்ள மௌனம் சாதிக்கிறார்கள்.

இப்போது தென்னிலங்கையில் மீண்டும் படுகொலைக் கலாசாரம் கட்டவிழ்கின்ற போது உலக ரீதியாக கொலைகள் பற்றிய புள்ளி விவரங்களை முன்னிறுத்தி, பௌத்த - சிங்கள ஆட்சி பீடத்தின் கொடூரப் பிடியை நியாயப்படுத்த முனைகிறார்கள் இந்த அபத்த வீரர்களான தெற்கு விமர்சகர்கள்.


Muhurtham
Jewels
Our Strategy Is To Provide
Our Customers
With Quality Products
more details CLICK
Bridal Set NEK 106 / 375
Harams
Haram NEK 318
Harams
Haram NEK 473
Harams
Haram NEK 477
Harams
Necklaces
Chains
Harams
Pendants
2900 Markham Rd Unit A30,
Toronto, ON M1X 1E6,
Canada
www.muhurthamjewels.ca
Jewelsmuhurtham
Muhurtham Jewels
(416) 321-7555



# இளம் மனித உரிமை செயற்பாட்டாளர் செயலமர்வுகள் பண்டத்தரிப்பில்

**(த.சுபேசன்)**

சட்டத்துக்கும் மனித உரிமை களுக்குமான நிலையத்தின் ஏற்பாட்டில் இளம் மனித உரிமை செயற்பாட்டாளர்களுக்கான செயலமர்வு இடம்பெற்றது.

யாழ்ப்பாணம், பண்டத்தரிப்புதியான இல்லத்தில் இடம்பெற்ற இந்தச் செயலமர்வில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் பிராந்திய இணைப்பாளர் கனகராஜ் மற்றும் சட்டத்தரணி தனஞ்சயன் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டனர்.

இதன்போது செயலமர்வில் கலந்து கொண்ட இளம் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களுக்கு அடிப்படை உரிமைகள், மனித உரிமைகள் மற்றும் இலங்கையினுடைய அரசியலமைப்பு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.

செயலமர்வில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், ஊடகவியலாளர்கள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், இளைஞர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.




# சொந்தக் காணியில் உள்ள பனை மரங்களை வீட்டுத் திட்டப் பயனாளிகள் பயன்படுத்த முடியும்

## பனை அபிவிருத்திச்சபை தலைவர் சகாதேவன் தெரிவிப்பு

(த.சுபேசன்)

வீட்டுத் திட்டப் பயனாளிகள் அவர்களுடைய சொந்தக் காணிகளில் உள்ள பனை மரங்களை வீட்டுத் திட்ட மரத் தேவைக்குப் பயன்படுத்த உடன் அனுமதி வழங்கப்படும் என்று பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் வி.சகாதேவன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் இடம் பெற்ற "பனை வளத்தைப் பாதுகாத்தல்" தொடர்பான கலந்துரையாடலின் போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,



வறுமைக்கோட்டுக்குக் கீழே உள்ள குடும்பங்கள் தமது சொந்தக் காணியில் உள்ள பனை மரங்களை வீட்டுத் தேவைக்குப் பயன்படுத்த பனை அபிவிருத்திச் சபையால் உடன் அனுமதி வழங்க முடியும்.

அத்தோடு வர்த்தக நோக்குடன் பனை மரங்களை வெட்டுவோருக்கான அனுமதி வழங்குவது தொடர்பில் பனை அபிவிருத்திச் சபையின் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் ஆலோசனை பெறப்பட்டு பின்னர் பெருந்தோட்ட அமைச்சின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு உரிய தீர்வு வழங்கப்படும்.

பனை மரங்களைத் தறிப்பது என்பது பனை வள அபிவிருத்தியின் ஒரு பகுதியாகவே இருக்க வேண்டும்.

புலம்பெயர் தமிழ் உறவுகளுடைய ஒத்துழைப்போடு அபிவிருத்தி செய்யப்படவுள்ள தனியார் காணிகளில் உள்ள பனை மரங்களை பிடுங்கி தோட்டமாக நடுவதற்கான திட்டம் ஒன்று நடைமுறைக்கு வரவுள்ளது.

இதனூடாக பனை மரங்களை அழிக்காது பாதுகாக்க முடியும். இது தொடர்பாக ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பனை மரம் மூலம் வருடம் ஒன்றில் 25 பில்லியன் டொலர் வருமானமாக ஈட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

குறைந்த பட்சம் 5 பில்லியன் டொலர் என்ற இலக்கை இவ்வருடம் அடையப் பாடுபடுவோம்.- என்றார்.

### அனைத்துலக பெண்கள் தினத்தை முன்னிட்டு

# முருகபூபதி எழுதியுள்ள 'யாதுமாகி' வெளியீடு!

ஆஸ்திரேலியாவில் வதியும் எழுத்தாளர் லெ. முருகபூபதி எழுதியுள்ள யாதுமாகி (02 ஆம் பாகம்) மின்னூல் அனைத்துலக பெண்கள் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் மார்ச் மாதம் அமேசன் கிண்டிலில் வெளியாகிறது.

இதன் வெளியீட்டு அரங்கு மார்ச் 15 ஆம் திகதி சனிக்கிழமை மெய்நிகரில் இடம்பெறும்.


கடந்த 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் யாதுமாகி முதலாம் பாகத்தின் மின்னூலை வெளியிட்டிருக்கும் முருகபூபதி, இந்த ஆண்டு அதன் இரண்டாம் பாகத்தை வெளியிடுகிறார்.

முதல் பாகத்தில் 28 பெண் ஆளுமைகள் இடம்பெற்றனர். குறிப்பிட்ட நூலை தற்போதும் அமேசன் கிண்டிலில் தரவிறக்கம் செய்து படிக்க முடியும்.

எதிர்வரும் மார்ச் மாதம் வெளியாகவிருக்கும் யாதுமாகி (இரண்டாம் பாகத்தில்) அமரர்களான யோகா பாலச்சந்திரன், மகேஸ்வரி சொக்கநாதர் , பாக்கியம் பூபாலசிங்கம், கமலி ஞானசுந்தரன், பராசக்தி சுந்தரலிங்கம் , கலாலக்ஷ்மி தேவராஜா, சங்கீத கலாநிதி அருந்ததி ஸ்ரீரங்கநாதன், மற்றும் புஸ்பராணி தங்கராஜா, கலையரசி சின்னையா, ஞானலக்ஷ்மி ஞானசேகரன், ஆனந்தராணி பாலேந்திரா, மெல்பன்மணி, யோகேஸ்வரி சிவப்பிரகாசம், சந்திரகௌரி சிவபாலன், ரேணுகா தனஸ்கந்தா, சாந்தி சிவக்குமார், விஜயலக்ஷ்மி இராமச்சந்திரன், நவஜோதி யோகரட்ணம், பூங்கோதை, கலா ஸ்ரீ ரஞ்சன், கவிஞர் அனார், தேவகி கருணாகரன், சூரியகுமாரி ஸ்ரீதரன் பஞ்சநாதன் , தேவகௌரி சுரேந்திரன் , சியாமளா யோகேஸ்வரன், வசந்தி தயாபரன் , உஷா ஜவகார், பத்மா இளங்கோவன், ராணி சீதரன், சுபாஷினி சிகதரன் , சிவநேஸ் ரஞ்சிதா ஆகியோரின் கலை, இலக்கிய, கல்வி, சமூக தன்னார்வத் தொண்டுப் பணிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த நூல் கலை, இலக்கியவாதி (அமரர்) அருண். விஜயராணிக்குச் சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

யாதுமாகி (இரண்டாம் பாகத்தின்) முகப்பு ஓவியத்தை மெல்பனிலிருந்து ஓவியர் கிறிஸ்டி நல்லரெத்தினம், மற்றும்




அக்கினிக்குஞ்சு யாழ். பாஸ்கர் ஆகியோர் வடிவமைத்துள்ளனர்.

சிறுகதை, நாவல், கட்டுரை, பயண இலக்கியம், சிறுவர் இலக்கியம், புனைவு சாராத பத்தி எழுத்துக்கள் , திறனாய்வு முதலான துறைகளில் எழுதிவந்திருக்கும் எழுத்தாளர் முருகபூபதியின் மற்றும் ஒரு வரவுதான் யாதுமாகி (இரண்டாம் பாகம்).

இலங்கையில் பாரதி, வாழும் வரலாறு மல்லிகை ஜீவா, பாரதி தரிசனம், The Mystique of Kelani River (ஆங்கில மொழி பெயர்ப்பு) ஆகிய முருகபூபதியின் இதர நூல்களையும் அமேசன் கிண்டிலில் தரவிறக்கம் செய்து படிக்க முடியும்.





# வவுனியா பல்கலையில் இடம்பெற்ற தொழில் வாய்ப்புகளுக்கான பயிற்சி

இரட்ணம் பவுண்டேஷன் மற்றும் விசன்ஸ் குளோபல் எம்பவர்மென்ட் நிறுவனங்களால், வவுனியா பல்கலைக்கழகத்தில் தொழில் வழிகாட்டல் அலகின் ஒருங்கிணைப்புடன், ஐந்து நாள்கள் தொழில் வாய்ப்புக்கான தலைமைத்துவப் பயிற்சிப்பட்டறை நடத்தப்பட்டது.

ஆங்கில மொழி மூலம் நடத்தப்பட்ட இப்பயிற்சிப்பட்டறையில் வவுனியா பல்கலைக்கழகத்தின் வணிகக்

கல்விப் பீடத்தைச் சேர்ந்த சிங்கள, முஸ்லீம் மற்றும் தமிழ் மாணவர்கள் உள்ளடங்கலாக மொத்தம் 35 மாணவர்கள் பங்குபற்றித் தலைமைத்துவம் மற்றும் தொழில்முறை திறன்கள் தொடர்பில் பங்கேற்றல் முறையில் பயிற்றுவிக்கப்பட்டனர்.

இந்தப் பயிற்சி பல்கலைக்கழக மாணவர்களின் தனிப்பட்ட மற்றும் தொழில்சார் வாழ்க்கை தொடர்பான ஊக்குவிப்புக்குச் சிறந்த வாய்ப்பாக அமைந்தது.

பயிலுனர்கள் இப்பயிற்சியில் தங்களது வாண்மைத்துவத்தை மேம்படுத்துவது தொடர்பிலும், தொழில் ரீதியாகத் தயார்படுத்துவதிலும் ஊக்கமெடுத்து, தலைமைத்துவம் சார்ந்த துலங்கல்களை சிறப்பாக வெளிப்படுத்தியிருந்தனர்.

ஒவ்வொரு பயிலுனரும் தமது வாழ்வின் அர்த்தம் பற்றிச் சிந்தித்து, சுயவிருத்தித் திட்டம் ஒன்றை உருவாக்கியிருந்தனர்.

நீண்ட கால அடிப்படையில் தொடர் கண்காணிப்புடன் ஒரு வருட நிகழ்ச்சித் திட்டமாகச் செயற்படுத்தப்பட்டு, மாணவர்களைச் சிறந்த திறன் கொண்டவர்களாக உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட இந்தப் பயிற்சியில், பயிலுனர்கள் ஐந்து குழுக்களாக செயற்பட்டு சமூகப்பிரச்சினைகளைத் தீர்ப்பதை நோக்கமாகக் கொண்ட செயல்திட்டங்களை உருவாக்கியுள்ளனர்.





தொழில் முயற்சியாண்மை, மரம் நடுதல், தொழில்நுட்பம் தொடர்பான விழிப்பூட்டல் மற்றும் கழிவு முகாமைத்துவம் போன்ற சமூக செயல் திட்டங்களை எதிர்வரும் ஒரு மாத காலப் பகுதியில், தொழில் வழிகாட்டல் அலகின் ஆலோசனையில் வெவ்வேறு தளங்களில் அமுலாக்கம் செய்ய உள்ளனர். இவ்வாறு, இந்தப்பயிற்சியின் மூலம், சமூகப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான வினையூக்கியாகப் பயிலுனர்கள் செயல்பட்டு, சிறந்த தலைவர்களாகவும், சமூகத்துக்குப் பயனுள்ள நற்பிரஜைகளாகவும் தங்களை வெளிப்படுத்த உள்ளனர்.

பயிற்சி பட்டறையின் இறுதி நாளில் நடைபெற்ற சான்றிதழ் வழங்கும் வைபவத்தில், பல்கலைக்கழக உபவேந்தரும் சிரேஷ்ட பேராசிரியருமான அற்புதராஜா அனைத்து பயிலுனர்களும் சான்றிதழ்கள் வழங்கினார்.

பின்னூட்டலின் போது, மூவின மாணவர்களும் உட்படுத்தப்பட்டு ஆங்கில மொழியில் இப்பயிற்சி வழங்கப்பட்டதை பயிலுனர்கள் பெரிதும் வரவேற்று பாராட்டினர்.

# திருகோணமலையில் கைவிடப்பட்ட குளங்களை புனரமைத்தால் அதிக விளைச்சலைப் பெறலாம்!

## சண்முகம் குகதாசன் எம்.பி. தெரிவிப்பு






(ஹஸ்பர் ஏ.எச்.)

அரிசி உற்பத்தியில் தன்னிறைவு காணும் பொருட்டாக திருகோணமலை மாவட்டத்தில் கைவிடப்பட்ட குளங்களை இந்த ஆண்டில் மறுசீரமைத்து அபிவிருத்தி செய்தால் 5000 மெற்றிக் தொன் நெல்லை பெறலாம் என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டமானது இன்று (26) மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் மாவட்ட அரச அதிபர் டபிள்யூ.ஜி.எம். ஹேமந்த குமாரவின் ஒழுங்கமைப்பில் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவரும் பிரதியமைச்சருமான அருண் ஹேமச் சந்திர தலைமையில் இடம் பெற்றது.

இதன்போது தனது பிரேரனைகளை முன்வைத்து உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

குறித்த கூட்டத்தில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான இம்ரான் மஹ்ரூப், ரொசான் அக்மீமன உட்பட திணைக்கள தலைவர்கள், முப்படைகளின் உயரதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

தொடர்ந்தும் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன்,

1985 ஆம் ஆண்டுக்கு முன்பு இந்த மாவட்டத்தில் கைவிடப்பட்டுள்ள 205 சிறு குளங்களில் ஐம்பதையும் கைவிடப்பட்டுள்ள அணைக்கட்டு 25 இல் ஐந்தையும் இந்த ஆண்டில் அபிவிருத்தி செய்தால் நன்மைகளைப் பெறலாம்.

இதுபோன்று யான் ஓயா அணைக்கட்டில் இருந்து நீலபணிக்கன் குளத்துக்கு நீர் வழங்குவதன் ஊடாக ஒரு முறை நெற் செய்கை மேற்கொள்ளப்படும் 3000 ஏக்கர் நிலத்தில் இரு போகமும் செய்கை பண்ண முடியும். இதன் மூலமாக 7000 மெற்றிக் தொன் நெல் உற்பத்தியை பெறலாம்.

பாலம்போட்டாறு பகுதியில் உள்ள பத்தினிபுர அனைக்கட்டின் சில கதவுகள் உடைக்கப்பட்டுள்ளதால் நீர் வீண் விரயமாக்கப்படுகிறது. இதனை சீர் செய்ய வேண்டும்.

மூதூர் பிரதேச செயலக பகுதியில் உள்ள கட்டை பறிச்சான் இறால் பாலம் உடைந்து விழும் அபாய நிலையில் உள்ளது. இதனைப் புனரமைக்க வேண்டும்.

குச்சவெளி பிரதேச செயலர் பிரிவில் பதவி - சிறிபுர வரையான எல்லை தெளிவின்றிக் காணப்படுகிறது .

கோணேசர் கோவில் வளாகத்தில் எவரது ஒப்புதலும் இன்றி வீதியின் இரு மருங்கிலும் கட்டப்பட்டுள்ள கடைகள் தொடர்பாக 2019.06.10 ஆம் திகதி எடுக்கப்பட்ட ஏகமானதமான தீர்வை தாமதமின்றி நிறைவேற்ற வேண்டும்.

யானைப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும்.

குச்சவெளியில் சுற்றுலா துறை அபிவிருத்திஎன்றபோர்வையில்சுவிகரிக்கப்பட்டுள்ள 883 ஏக்கர் நிலங்களை விவசாய செய்கைக்காக விடுவிக்கவும்.

இதேபோன்று திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலர் பகுதியில் துறை முக அதிகார சபையால் 5572 ஏக்கர் நிலம் குத்தகைக்கு வழங்க, கையகப்படுத்திக் காணிகளைக் கபளீகரம் செய்வது சட்டத்துக்கு முரணானது. இதனை விடுவிக்க நடவடிக்கை எடுக்கவும்.- என்றார்.

# ஞானச்சுடர் ஆன்மீக சஞ்சிகை நடத்திய வாசகர் போட்டியில் பரிசு பெற்றோர் விவரம்

## 28 ஆம் திகதி பரிசில் வழுங்கல் நிகழ்வு

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமசைவகலைபண்பாட்டுபேரவையால் மாதந்தோறும் வெளியிடப்பட்டு வரும் ஞானச்சுடர் ஆன்மீக சஞ்சிகை நடத்திய வாசகர் போட்டியில் பரிசு பெற்றோர் விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப் போட்டியில் முதல் பரிசை ஆவரங்கால், சிவன் கோவில் வீதியைச் சேர்ந்த ஆ.ருக்குமணிதேவியும், இரண்டாம் பரிசை வல்வெட்டித்துறை, குச்சம் ஒழுங்கையைச் சேர்ந்த திருமதி. ம.ஸ்கந்தராசாவும், மூன்றாம் பரிசை அல்வாய், முடக்கந்தோட்டத்தைச் சேர்ந்த யுவராஜ் பிறேமினியும் பெற்றுள்ளனர்.

ஆறுதல் பரிசுகளை கோண்டாவில் மேற்கு, ரயில் நிலைய வீதியைச் சேர்ந்த திருமதி நாகேஸ்வரி சண்முகரத்தினம், தெல்லிப்பளை, கொல்லங்கலட்டி, கிளாணை வீதியைச் சேர்ந்த ஜெ.பேரானந்தம், யாழ்ப்பாணம், நாவலர் வீதியைச் சேர்ந்த கை.அங்கயற்கண்ணி, திருநெல்வேலி கிழக்கு, இராமலிங்கம் வீதியைச் சேர்ந்த செ.வசந்தாதேவி, நல்லூர், கோவில் வீதியைச் சேர்ந்த எம்.அருந்ததி, வசாவிளான் திடற்புலத்தைச் சேர்ந்த கே.தீபிகா, அச்செழுவையைச் சேர்ந்த ஸ்ரீதரன் சத்தியபாமா, யாழ்ப்பாணம், புறாடி ஒழுங்கையைச் சேர்ந்த திருமதி. ஏகாம்பரம் ஜெயராணி, ஏழாலை மேற்கைச் சேர்ந்த சில கிருபாலோசனி, யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியைச் சேர்ந்த பா.நிர்மலாதேவி ஆகிய பத்துப் பேரும் பெறுகின்றனர்.

வாசகர் போட்டியில் வெற்றியீட்டியோருக்கான பரிசில்கள் எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாசி மாத ஞானச்சுடர் சஞ்சிகை வெளியீட்டின் போது வழங்கப்படும்.

தொண்டைமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்ட பேரவையின் மாதாந்த ஆன்மீக சஞ்சிகையான ஞானச்சடர் மாசிமாத இதழ் வெளியீட்டு விழா வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு ஆச்சிரம பொறுப்பாளர், சாதனைத் தமிழன், அமுதகலா சுரபி கலாநிதி செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் திருமதி சிந்துரா கலியுகநாதன் வெளியீட்டுரையையும் இளைப்பாறிய ஆசிரியர் திருமதி புனிதவதி சண்முகமை மதிப்பீட்டுரையையும் நிகழ்த்துவர்.

# மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு பாடசாலைகளுக்கு நாளை விடுமுறை!

**(தலவாக்கலை பி.கேதீஸ்)**

மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு தமிழ் பாடசாலைகளுக்கு நாளை 27ஆம் திகதி விசேட விடுமுறை வழங்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்றைய நாளுக்கு உரிய கல்விச் செயற்பாடுகளை மார்ச் மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை நடத்த வேண்டும் எனவும் அனைத்து தமிழ் பாடசாலைகளின் அதிபர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, வடக்கு, கிழக்கு, ஊவா, சப்ரகமுவ மாகாணத்திலுள்ள தமிழ் பாடசாலைகள் அனைத்துக்கும் நாளை விடுமுறை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சம்மாந்துறையில் 'கிளீன் ஸ்ரீலங்கா'





**(நூருல் ஹுதா உமர்)**

'கிளீன் ஸ்ரீலங்கா' வேலைத் திட்டத்தை வினைதிறன் மிக்கதாக சம்மாந்துறை தொகுதியின் செயல்படுத்தும் பொருட்டு இன்று (26) சம்மாந்துறை கல்லரிச்சல் பொட்டியர் சந்தியில் உத்தியோக பூர்வமாக இந்த வேலைத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கிராமிய அபிவிருத்தி சமூக வலுவூட்டல் பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ, கலந்து கொண்டார். கௌரவ அதிதிகளாக அம்பாறை கரையோர பிரதேசங்களின் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.ஆதம்பாவா, அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக அபேவிக்ரம, அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.எல்.ஏ கமல் நெத்திமி, சம்மாந்துறை பிராந்திய நீர்பாசன பொறியியலாளர் ஆர்.வேல் கஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் சம்மாந்துறை தொகுதி அமைப்பாளர் ரிசாட் எம் புஹாரி, சம்மாந்துறை பிரதேச சபை செயலாளர் எம்.ஏ.கே.முஹம்மட், சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி எஸ். ஜெயலத், மற்றும் திணைக்களங்களின் தலைவர்கள், உயர் அதிகாரிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இன்றைய தினம் குறிப்பாக சம்மாந்துறை மஸ்ஜிதுல் உம்மாவை அண்மித்த பிரதேசம், அல் மர்ஜான் பாடசாலை அருகாமை போன்ற இடங்களில் "கிளீன் ஸ்ரீலங்கா" நிகழ்ச்சித் திட்டம் நடைபெற்றது.

# போலியான ஆவணத்துடன் மணல் ஏற்றியவர் கைது!

**(த.சுபேசன்)**

போலியான ஆவணத்துடன் சட்டவிரோதமாக டிப்பர் வாகனத்தில் மணல் ஏற்றிச்சென்ற நபர் ஒருவர் திங்கட்கிழமை சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சந்தேக நபர் கிளிநொச்சியில் இருந்து போலியான ஆவணத்துடன் யாழ். நோக்கி மணலை ஏற்றி வந்த நிலையில் சாவகச்சேரிப் பொலிஸார் வழிமறித்து ஆவணங்களை சோதனை செய்துள்ளனர். இதன்போது சந்தேக நபர் போலியான அனுமதிப் பத்திரத்தைக் கிழித்து எறிந்துள்ளார்.

இந்த நிலையில் பொலிஸார் அவரைக் கைது செய்துள்ளனர்.

ள புவிச்சரிதவியல் பணியகத்தின் உதவியோடு மேற்படி ஆவணம் போலியானதுஎனவும்உறுதிப்படுத்தியுள்ளனர்.



சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன தலைமையிலான குழுவினரே இந்தக் கைதுநடவடிக்கையைமுன்னெடுத்துள்ளனர்.





# முன்பள்ளி ஆசிரியர்களுக்கான சுகாதார மேம்பாட்டுக் கருத்தரங்கு

**(நூருல் ஹுதா உமர்)**

காரைதீவு பிரதேசத்தில் உள்ள சகல முன்பள்ளி பாடசாலைகளதும் சுகாதாரத்தை மேம்படுத்தும் வகையில் சகல முன்பள்ளி ஆசிரியர்களுக்குமான சுகாதார மேம்பாட்டுக் கருத்தரங்கு காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நடைபெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் திருமதி சகிலா இஸ்ஸதீனின் வழிகாட்டலுக்கு அமைய காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லிமா வசீர் தலைமையின் கீழ் இக்கருத்தரங்கு நடைபெற்றது.

இக்கருத்தரங்குக்கு வளவாளராக வைத்தியர் முஹம்மட் ஹில்மி கலந்து கொண்டு சுகாதார மேம்பாட்டு விரிவுரைகளை வழங்கினர். அத்துடன் சகல முன்பள்ளி பாடசாலை சுகாதாரத்தை மேம்படுத்தும் வகையில் தொடர்ச்சியாக கண்காணிப்பை மேற்கொள்வதற்கான சகல திட்டங்களும் வகுக்கப்பட்டன. அந்த வகையில் ஒவ்வொரு கிழமையும் ஒரு முன்பள்ளி பாடசாலைகளுக்கான பிள்ளைகளின் பெற்றோர்களுக்குக் கருத்தரங்கு ஒன்றை நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த கருத்தரங்கில் கல்முனை கல்வி வலய ஆரம்ப பிரிவின் உதவி கல்வி பணிப்பாளர், காரைதீவு பிரதேச முன்பள்ளி சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தர் உட்பட முன்பள்ளி பாடசாலை ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.









# சுகாதாரமற்ற உணவகங்களுக்கு எதிராகத் தண்டப்பணம் அறவீடு!

**(பாறுக் ஷிஹான்)**

நோன்பு காலத்தை முன்னிட்டு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சஹீலா இஸ்ஸடீனின் நெறிப்படுத்தலில் நேற்று செவ்வாய்க்கிழமை (25) திடீர் உணவுப் பரிசோதனை அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை, நிந்தவூர், மருதமுனை, கல்முனை, சாய்ந்தமருது, ஆகிய பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம். நௌஸாத் தலைமையில் கல்முனை மாநகர் பகுதியில் திடீர் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதில் 5 உணவகங்களுக்கு எதிராக கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கு உணவின் தரம் பற்றி தகவல் வழங்கப்பட்டது.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் மதன் தலைமையிலான குழுவினரால் சம்மாந்துறை பிரதேசத்தில் திடீர் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

5 உணவகங்களுக்கும் எதிராகச் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கு உணவின் தரம் பற்றி தகவல் வழங்கப்பட்டது.

அத்துடன் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட சுகாதாரமற்ற 5 உணவகங்களின் உரிமையாளர்களுக்கு எதிராகச் சம்மாந்துறை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு 70 ஆயிரம் ரூபா தண்டப் பணம் அறவிடப்பட்டது.




# ‘சுபீட்சமான எதிர்காலத்துக்கான கல்வி’ எனும் தொனியில் விஷேட நடை பவனி!

(எம்.ஏ.றமீஸ்)

‘சுபீட்சமான எதிர்காலத்துக்கான கல்வி’ எனும் தொனிப் பொருளில் அட்டாளைச்சேனை மத்திய மகா வித்தியால பழைய மாணவர் சங்கம் மற்றும் பாடசாலை அபிவிருத்திக் குழு ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த சாதனியன் ‘நடைபவனி-2025’ இன்று (26) இடம்பெற்றது.

அதிபர் ஏ.எல்.பாயிஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வு அட்டாளைச்சேனை மீனோடைக்கட்டு பிரதேசத்தில் ஆரம்பமானது. அக்கரைப்பற்று - கல்முனை பிரதான பாதை மூலமாக பல நூற்றுக் கணக்கான பழைய மாணவர்கள் நெற்றிப் பட்டி அணிந்தவாறு இந்த நடை பவனியை மேற்கொண்டு அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தைச் சென்றடைந்தனர்.

இந்த நடைபவனியின் போது நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெவ்வை, திருகோணமலை மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி அல்-ஹாபிழ் என்.எம்.அப்துல்லாஹ், கல்முனை நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம்.எஸ்.எம்.சம்சுதீன் உள்ளிட்ட கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள், கல்வியியலாளர்கள், உயரதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், துறைசார் முக்கியஸ்தர்கள், நலன்விரும்பிகள், பாடசாலைச் சமூகத்தினர், பழைய மாணவர்கள் கலந்து கொண்டனர்.

நூற்றாண்டு விழா கடந்து செயற்பட்டு வரும் இந்தப் பாடசாலையின் பாழைய மாணவர்கள் கலந்து கொண்ட இந்த நடை பவனி மூலம் தேக ஆரோக்கியத்தைக் கட்டியெழுப்புவதோடு, எதிர்கால சந்ததியினரின் ஆரோக்கியம் தொடர்பில் விஷேட விழிப்புணர்வை ஏற்படுத்தி சுபீட்சமான எதிர்கால கல்வி விருத்தியை ஏற்படுத்துவதற்கான விஷேட வேலைத் திட்டமாக இது அமைகின்றது என நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் சுட்டிக்காட்டினர்.





# மீளக்குடியேறியவர்களுக்கான வீட்டுச் சான்றிதழ்கள் வழங்கல்

(ஹஸ்பர் ஏ.எச்.)

இந்தியாவில் இருந்து மீளத் திரும் பியவர்களுக்கு, நிலைபேறான மீள் குடியேற்றத்துக்கும் மீள் ஒருங்கி ணைவுக்குமான விரிவாக்கப்பட்ட ஆதரவுத் திட்டத்தின் ஊடாக வீட்டுச் சான்றிதழ்கள் மற்றும் காசோலைகள் வழங்கும் நிகழ்வு நேற்று (25) திரு கோணமலை மாவட்ட அரசாங்க அதி பர் டப்ளியூ.ஜி.எம். ஹேமந்த குமார தலைமையில் மாவட்ட செயலக மண் டபத்தில் நடைபெற்றது.

திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி, பட்டினமும் சூழலும், மொறவெவ ஆகிய பிரதேச செயலகப் பிரிவில் வாழும் குறித்த பயனாளிகளுக்கு இவை வழங்கப்பட்டன.

பிரித்தானிய தூதரகம் மற்றும் நோர்வே அரசின் நிதிப்பங்களிப்புடன் இவ்வீடுகள் முழுமையாகத் திருத்தம் செய்யப்பட்டுப் பயனாளிகளுக்குக் கையளிக்கப்பட்டன.

இதன்போது குச்சவெளி பிர தேச செயலகத்தில் இருந்து 17 பய னாளிகளுக்கும், பட்டினமும் சூழலும் பிரதேச செயலகத்தில் இருந்து 16 பயனாளிகளுக்கும், மொறவெவ பிரதேச செயலகத்தில் இருந்து 07 பயனாளிகளுக்குமாக மொத்தம் 40 பயனாளிகளுக்குச் சான்றிதழ்கள் மற்றும் காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டன.

அந்த வகையில் வீட்டுத் திட்டப் பய னாளிகளுக்கு 5 லட்சம்ரூபா பெறு மதியில் வீடு பூரணப்படுத்தப்பட்டதற் காக நன்கொடை உரிமைச் சான்றித ழும், 15 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலையும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன. இதன்போது மேலதிக அரச அதிபர் எஸ். சுதாகரன், மாவட்ட செயலக பதவி நிலை உத்தி யோகத்தர்கள், ஐக்கிய நாடுகள் அபி விருத்தித் திட்டத்தின் திட்ட நிபுணர், துறை சார்ந்த அதிகாரிகள் மற்றும் பயனாளிகளும் கலந்து கொண்டனர்.

## த.வெ.க. 2 ஆம் ஆண்டு விழா தொடக்கம்:

# கையெழுத்து இயக்கத்தை தொடங்கி வைத்தார் விஜய்

மாமல்லபுரத்தை அடுத்த பூஞ்சேரி பகுதியில் உள்ள போர் பாயிண்ட் எனப்படும் தனியார் சொகுசு விடுதியில், தமிழக வெற்றிக் கழகத்தின் இரண்டாம் ஆண்டு விழா கொண்டாட்டம் இன்று நடைபெற உள்ளது.

நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளில் இருந்து வரும் 2,500 இற்கும் மேற்பட்ட கட்சி நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் சிரமமின்றி வந்து செல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

த.வெ.க. தலைவர் விஜய், தேர்தல் வியூக நிபுணர் பிரசாந்த் கிஷோர், த.வெ.க. பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் உள்ளிட்டோர் இந்த விழாவுக்கு வருகை தந்துள்ளனர். வீதி ஓரம் எங்கும் விஜய்க்கு த.வெ.க. நிர்வாகிகள் சிறப்பான வரவேற்பை கொடுத்தனர். கிடக்குழி மாரியம்மாளின் நாட்டுப்புற பாடலுடன் நிகழ்ச்சி தொடங்கியது. நிகழ்ச்சிக்கு வருகை தந்த விஜய், அங்கு வைக்கப்பட்டிருந்த மும்மொழி கொள்கைக்கு எதிரான வாசகங்கள் அடங்கிய பதாகையில் கையெழுத்திட்டு, #GetOut கையெழுத்து இயக்கத்தை தொடங்கி வைத்தார்.







"ஒருவர் பாட்டுப் பாட, மற்றொருவர் அதற்கு ஏற்ற ஒத்திசைவுடன் நடனமாட திரைமறைவு கூட்டுக் களவாணிகள் இருவரும் தமிழக மக்களின் பிரச்சினைகளை இருட்டடிப்புச் செய்ய என்னவெல்லாம் செய்ய முடியுமோ அதை எல்லாம் செய்து வருகின்றனர்.

புதிய கல்வி கொள்கை, மும்மொழி திட்ட திணிப்போடு சேர்த்து முக்கிய அவலங்களை எதிர்த்து போராட இவர்களை #GETOUT செய்திட உறுதி ஏற்போம். விமர்சனத்துக்கு அஞ்சி கொடுங்கோலுடன் மக்களின் குரல்களை ஒடுக்கும் கோழைத்தனம்" இவ்வாறு அந்த பதாகையில் வாசகங்கள் இடம்பெற்றிருந்தன.

# த.வெ.க. தலைவர் விஜய் வீட்டின் மீது காலணி வீச்சு

சென்னை நீலாங்கரையில் உள்ள த.வெ.க. தலைவர் விஜய் வீட்டுக்குள் இன்று காலை இளைஞர் ஒருவர் செருப்பு வீசியுள்ளார்.

நீண்ட நேரமாக விஜய்யின் வீட்டின் அருகே நின்று கொண்டிருந்த அவர், கையில் வைத்திருந்த செருப்பை கேட்டின் உள்ளே தூக்கி வீசிவிட்டு அங்கிருந்து நடந்து சென்றார். உடனடியாக அங்கு பாதுகாப்புக்கு நின்றிருந்த காவலகர்கள் அவரை பிடித்தனர்.



அவரிடம் விசாரணை நடத்தியதில் அவர் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்று தெரியவந்ததாக கூறப்படுகிறது. காலணியை வீசிய பிறகு விஜய் படங்களில் வரும் பன்ச் வசனங்களை அவர் பேசும் வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

தமிழக வெற்றிக் கழகத்தின் இரண்டாம் ஆண்டு விழா இன்று நடக்க உள்ள நிலையில் அக்கட்சியின் தலைவர் விஜய் வீட்டில் செருப்பு வீசப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# அமித் ஷா வருகைக்கு எதிர்ப்பு; காங்கிரஸ் கட்சியினர் ஆர்ப்பாட்டம்

தமிழகத்துக்கு கல்வி, பேரிடர் நிதி தர மறுப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து, கோவை வடக்கு மாவட்ட காங்கிரஸ் கட்சியின் சார்பில், மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவின் கோவை வருகையை கண்டித்து காந்திபார்க் பகுதியில் நேற்று கருப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

காங்கிரஸ் கட்சியின் தமிழக தலைவர் செல்வப் பெருந்தகை தலைமை வகித்தார்.

வடக்கு மாவட்ட காங்கிரஸ் கட்சியின் தலைவர் வி.எம்.சி.மனோகரன் முன்னிலை வகித்தார். மாநகர் மாவட்ட காங்கிரஸ் தலைவர் கருப்புசாமி, தெற்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் பகவதி மற்றும் காங்கிரஸ் கட்சியின் மாநில, மாவட்ட நிர்வாகிகள், உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

அதேபோல, அமித்ஷா வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து த.பெ.தி.க, இ.கம்யூ, திராவிடர் கழகம், திராவிடர் தமிழர் கட்சி உள்ளிட்டவை சார்பில் பீளமேடு பி.எஸ்.ஜி டெக் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.




திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில், பீளமேடு ஹோப்காலேஜ் சந்திப்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. தடையை மீறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை பொலிஸார் கைது செய்தனர்.






# கொங்கோவில் பரவி வரும் மர்ம நோய்; 53 பேர் பலி

மத்திய ஆபிரிக்காவின் கொங்கோவில் பரவி வரும் மர்ம நோயால் 53 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த நோய்த் தொற்று காரணமாக 431 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நோய்த் தொற்றுக்குள்ளானவர்களில் பெரும்பாலானோர் 48 மணி நேரத்தில் உயிரிழந்துள்ளனர் என உலக சுகாதார ஸ்தாபனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

வௌவால் கறியினை உட்கொண்ட 3 சிறுவர்களிடமே இந்த நோய் ஆரம்பத்தில் கண்டறியப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.






# உக்ரைனில் அமைதியை ஏற்படுத்தும் ட்ரம்ப்பின் முயற்சிக்கு பிரித்தானியா - பிரான்ஸ் வரவேற்பு

உக்ரைனில் அமைதியை ஏற்படுத்துவதற்காகத் தலைமை வகிக்கும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் செயற்பாட்டை வரவேற்பதாகப் பிரித்தானியப் பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் மற்றும் பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரோன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், பிரித்தானிய மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளின் தலைவர்களுக்கு இடையே இந்த விடயம் தொடர்பில் தொலைபேசி கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

ரஷ்யாவுடனான எந்தவொரு அமைதி பேச்சுவார்த்தையிலும் உக்ரைன் மையமாக இருக்க வேண்டும் என அவர்கள் இருவரும் குறிப்பிட்டனர் என தெரிவிக்கப்படுகிறது.

அதற்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்கு ஐரோப்பா தயாராக வுள்ளதாகவும் பிரித்தானியப் பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் மற்றும் பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரோன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கடந்த திங்கள் கிழமை பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரோன் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

இந்தநிலையில் பிரித்தானியப் பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் இந்த வாரம் வோஷிங்டனுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

# இந்தோனேசியாவில் 6.1 ரிக்டர் நில அதிர்வு

இந்தோனேசியாவின் சுலவேசி தீவின் கடற்கரை பகுதியில் 6.1 ரிக்டர் அளவில் நில அதிர்வு பதிவாகியுள்ளதாக அமெரிக்கப் புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நில அதிர்வால் ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்த தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

உள்ளூர் நேரப்படி காலை 6.55 க்கு இந்த நில அதிர்வு ஏற்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும் நிலநடுக்கத்தைத் தொடர்ந்து சுனாமி அச்சுறுத்தல் விடுக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.



கனடா முரசு

புதன்கிழமை 26/02/2025

## அல்பெர்டாவில் குழந்தைகளை கத்தியால் குத்தியவர் கைது

வடக்கு அல்பெர்டாவில் கடந்த வாரம் ஏழு மற்றும் எட்டு வயதுடைய இரண்டு குழந்தைகள் கத்தியால் குத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். 03






# கனடாவில் புதிய விசா விதிமுறைகள் வெளிநாட்டினர் குடியேறுவதில் சிக்கல்

**கனடாவில் அதிகளவில் வெளி நாட்டினர் குடியேறுவதை தடுக்கும் நோக்கி விசா வழங்குவதில் புதிய விதிமுறைகளை அந்நாட்டு அரசு அமுல்படுத்தியுள்ளது.**

**இந்த நடவடிக்கையால் இலங்கை யர்கள், இந்தியர்கள் உட்பட கனடா வில் வசிக்கும் பல்வேறு நாட்டின ருக்கு சிக்கல் ஏற்பட வாய்ப்புள்ள தாகவும் குறிப்பாக புதிதாக கனடா வுக்கு வேலைக்கு செல்வோர் மற்றும் குடியேற நினைப்பவர்களுக்கும் சிக்கல் ஏற்பட வாய்ப்பு இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

கனடாவில் வெளிநாடுகளில் இருந்து வந்து தங்கி பயிலும் மாணவர்கள், தொழிலாளர்கள் மற்றும் புலம்பெயர்ந்தவர்களின் விசா நிலையை, எந்த நேரத்திலும் மாற்றுவதற்கான அதிகாரத்தை கனடா எல்லைப் படை அதிகாரிகளுக்கு அந்நாட்டு அரசு வழங்கியுள்ளது.

அந்தவகையில் குடிவரவு மற்றும் அகதிகள் பாதுகாப்பு விதிமுறைகளில் செய்யப்பட்டுள்ள திருத்தங்களின் கீழ், மின்னணு விசா, தற்காலிக தங்கும் விசா உள்ளிட்டவற்றை மறுக்கவோ நிராகரிக்கவோ கனடா எல்லைப் படைக்கு தற்போது அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், கனடாவில் தங்கியிருக்கும் வெளிநாட்டவர் விசா காலம் நிறைவடைந்த பிறகும் அவர் நாட்டை விட்டு வெளியேறமாட்டார் என்று கனடா அதிகாரி நினைத்தால் அவரது விசா காலம் முடியும் முன்பே இரத்து செய்யவும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்திய மாணவர்கள் மற்றும் சட்டப்பூர்வமாக குடியேறுபவர்களுக்கு கனடா மிகவும் விருப்பமான இடங்களில் ஒன்றாகும். தரவுகளின்படி, தற்போது கனடாவில் உயர்க்கல்வி படித்து வரும் இந்திய மாணவர்கள் மட்டும் 4.2 லட்சத்துக்கும் அதிகமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


மேலும், தற்காலிக தங்கும் விசாவை பெற்று இந்தியாவைச் சேர்ந்த பலரும் கனடாவுக்கு சுற்றுலா சென்று வருகின்றனர் 02

# நகைக் கடை கொள்ளை முயற்சியில் ஈடுபட்ட நால்வரை தேடும் பொலிஸார்

கனடாவின் வாகன் நகரில் உள்ள ஒரு ஆபரணக் கடையில் கடந்த வாரம் நடந்த ஆயுத முனையில் கொள்ளை முயற்சியை மேற்கொண்ட நான்கு பேரை யோர்க் பொலிஸார் தேடி வருகின்றனர்.

கடந்த 24ஆம் திகதி இரவு 9 மணியளவில் சென்வே பாலிவர்டு மற்றும் ஹைவே 427 பகுதியில் உள்ள ஒரு ஆபரணக் கடையில் கொள்ளை முயற்சி இடம்பெறுவதாக பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடை மூடப்பட்டதன் பின்னர் வெளியே வந்த ஒருவரிடம் நான்கு பேரும் கொள்ளையிட முயன்றுள்ளனர். 02



உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் -Bonding Tamils Globally



# பிரிட்டிஷ் கொலம்பியாவின் கடற்கரையில் நிலநடுக்கம்

பிரிட்டிஷ் கொலம்பியாவின் கடற்கரையில் நிலநடுக்கம் ஏற்பட்டு உள்ளது.

இதற்கு நான்கு நாள்களுக்கு முன்பு அதே பகுதியில் சமன்வயமான அதிர்வுகள் பதிவாகியிருந்தது.

எனினும், அண்மைய நிலநடுக்கம் யாராலும் உணரப்படவில்லை என கனடிய நில அதிர்வு கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த விபத்தினால் எவ்வித பாதிப்புக்களும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது. நான்கு நாட்களுக்கு முன் நிகழ்ந்த அதிர்வுகள் 4.7 ரிக்டர் அளவுள்ள நிலநடுக்கம் செச்செல்ட் (Sechelt) நகருக்கு அருகே வான்கூவர் தீவின் தென்மேற்குப் பகுதியில் ஏற்பட்டது.

அந்த நிலநடுக்கத்தினால்: சன்ஷைன் கோஸ்ட் (Sunshine Coast), மெட்ரோ வான்கூவர் (Metro Vancouver) , வான்கூவர் தீவு (Vancouver Island) உள்ளிட்ட பகுதிகளின் சில இடங்களில் அதிர்வுகள் உணரப்பட்டன.

எனினும், வெள்ளிக்கிழமை நிலநடுக்கத்திற்குப் பிறகு ஏற்பட்ட சில சிறிய பிந்தைய அதிர்வுகள் தவிர, எந்தவித சேதம் ஏற்பட்டமை குறித்து பதிவாகவில்லை. நிலநடுக்கங்கள் தொடர்ந்து ஏற்படு வதால், அதிர்வுகளை உணர்ந்தால், பாதுகாப்பான இடத்திற்கு செல்லவும் என்று அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவும், 2024 முதல் பாதியில் மட்டும் 3.6 லட்சம் இந்தியர்களுக்கு பயண விசாவை அந்நாட்டு அரசு வழங்கியுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில்,மாணவர்கள், சட்டப்பூர்வமாக குடியேறியவர்களின் விசாக்கள் இரத்து செய்யப்பட்டால், அவர்கள் குறிப்பிட்ட காலத்துக்குள் கனடாவைவிட்டு வெளியேற நோட்டீஸ் வழங்கப்படும் என்று தெரி விக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே காலிஸ்தான் விவகாரத்தில் இந்தியா - கனடா இடையே பிரச்சினை நிலவி வரும் சூழலில், புதிய விசா விதிமுறைகளால் பாதிப்பு ஏற்படக்கூடும் என்ற அச்சம் இந்தியர்களிடையே நிலவுகிறமை குறிப்பிடத்தக்கது.

## நகைக் கடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி நபர் விரைவாக தனது வாகனத்திற்குள் நுழைந்து கதவுகளை பூட்டியதனால், கொள்ளையர்கள் அவரை அடைய முடியவில்லை. கொள்ளையர்கள், வாகனத்தின் ஜன்னலை சுத்தியல் கொண்டு அடித்து உடைக்க முயன்றுள்ளனர்.

மேலும் ஒருவரிடம் துப்பாக்கி இருந்ததாக பாதிக்கப்பட்டவர் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

எனினும் குறித்த நபருக்கு எந்த வொரு காயங்களும் ஏற்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தப்பியோடிய நான்கு சந்தேகநபர்களும் 15 முதல் 20 வயதிற்குட்பட்ட ஆண்கள் எனவும் அவர்கள் கருமையான உடைகள் அணிந்து, முகத்தை மறைத்திருந்தனர் எனவும் கூறப்படுகின்றது.



# டொரொண்டோவில் மீண்டும் பனிப்பொழிவு

வாரத்தின் தொடக்கத்தில் வெப்பமான காலநிலையை எதிர்கொண்ட டொரொண்டோ, நாளை முதல் மீண்டும் பனிப்பொழிவும் உறைபனித் தரையும் எதிர்கொள்ளக்கூடும் என கனடா சுற்றுச்சூழல் திணைக்களம் அறிவித்துள்ளது.

கடந்த புதன்கிழமை அதிகபட்ச வெப்பநிலை 3 பாகை செல்சியசாக இருக்கும்.

ஆனால், இரவு 0 பாகை செல்சியஸ்தாக வரை குறையும். மாலை நேரத்தில் 2 - 4 சென்றி மீற்ர் வரை பனிப்பொழிவு ஏற்படும் வாய்ப்புள்ளது.

இது, இந்த மாதம் ஆரம்பத்தில் தொடர்ந்து ஏற்பட்ட பனிப் புயல்களில் 50 சென்றி மீற்றருக்கும் அதிகமான பனி வீழ்ந்ததன் பின்னர், நகரம் காணும் முதல் பனிப் பொழிவு என்பது குறிப்பிடத்தக்கது.

நாளை மற்றும் நாளை மறுதினம் வெள்ளிக் கிழமைகளில் மேகமூட்டம் நிலவும் என எதிர்வு கூறப் பட்டுள்ளது.

நாளை வியாழக்கிழமை 40 வீதம் மழை அல்லது பனித்துளிகள் ஏற்படும் வாய்ப்பு உள்ளதாகவும், வெள்ளிக் கிழமை 60 வீதம் பனிப்பொழிவு அல்லது மழை பெய்யும் சாத்தியம் உண்டு எனவும் எதிர்வுகூறப்பட்டுள்ளது.




## அல்பெர்டாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த சந்தேக நபர் மீது பொலிஸா ரினால் வழக்கு பதிவு செய்யப்பட்டுள் ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 19 ஆம் திகதி இந்த சம்பவம் குறித்து பொலிஸ் அவசர சேவை பிரி விற்கு தகவல் அளிக்கப்பட்டது.

ஒரு குழந்தை படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக் கப்படுகின்றது.

இதேபோல், இன்னொரு குழந்தை சிறிய கத்திக் காயத்துக்கு சிகிச்சை பெற்றுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய 35 வயதான கிராண்டு பிரெய்ரியைச் சேர்ந்த ஒரு நபர் மீது தாக்குதல் குற் றச்சாட்டில் வழக்கு பதிவு செய்யப் பட்டுள்ளது.

இந்த நபர் பின்னர் பிணையில் விக்கப்பட்டுள்ளார், மேலும் மேற்படி நபர் மார்ச் 13 திகதி நீதிமன்றில் முன்னி லையாகவுள்ளார்.